# பெத்லகேம் குறவஞ்சிச்சிறப்பும் கிறிஸ்தவர்களின் மகிமையும்

***முனைவர் ப.சு. செல்வமீனா***
இணைப்பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்
அழகப்பா அரசு கலைக்கல்லூரி, காரைக்குடி

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 2**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2023**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS2i1-July.6403

***முன்னுரை***
*அமிழ்தினும் இனிய தமிழ்மொழி எண்ணிறந்த பக்தி இலக்கியங்களைத் தன்னகத்துக் கொண்டு விளங்குவதாகும். தமிழகத்துச் சமயங்கள் அனைத்தும் தமிழன்னையைத் தத்தம் படைப்புகளால் அழகுபடுத்தியுள்ளன. அவ்வகையில் அழகு செய்த சமயங்களுள் கிறிஸ்தவமும் ஒன்று. தமிழ்மொழியில் காணப்படும் உரைநடை, சிறுகதை, புதினம், காப்பியம், சிற்றிலக்கியங்கள், மொழிபெயர்ப்பு, அகராதி, இதழ்கள் முதலான பல இலக்கியவகைகளை அறிமுகப்படுத்திய பெருமை கிறிஸ்தவ சமயத்திற்குண்டு. ஒரு மொழிநடையின் மீது பாதுகாப்புணர்வும் வழிபாட்டு உணர்வும் தோன்றும் போது ஓர் இலக்கணம் விதிமுறைப் பண்புகளை ஏற்கிறது. வேதநாயக சாஸ்திரியார் படைத்த பெத்லகேம் குறவஞ்சிச்சிறப்பும் கிறிஸ்தவர்களின் மகிமையும் என்பது குறித்து விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

### வேதநாயக சாஸ்திரியார் -சிறு அறிமுகம்

வேதநாயக சாஸ்திரியார் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர். “த.வே.சா.வின் தந்தை அருணாசலம் பிள்ளை திருநெல்வேலியில் வாழ்ந்த ஒரு கவிஞர் தமிழ்ப்பற்றாளர். கி.பி.1760 ஆம் ஆண்டு தமது இருபத்து ஐந்தாம் வயதில் கிறித்தவராக மனம் மாறித் திருமுழுக்குப் பெற்ற பின்பு தேவசகாயம் என்ற பெயர் பெற்றார்.”[1] “ஞானப்பு என்பவரை 1770 இல் மணம் முடித்தார். கத்தோலிக்க கிறித்துவராக வாழ்ந்த இவர்களுக்கு 1774 ஆம் ஆண்டு வேதநாயகம் பிறந்தார்.”[2] ஆனால் அவர் 1773 இல் பிறந்ததாக மயிலை சீனி வேங்கடசாமியும்[3] 1775 இல் பிறந்ததாக சதாசிவம் பிள்ளையும் கூறுவர்.

மறுநெறிக் கிறித்தவ குரு கிறிஸ்டியன் பிரடெரிச் சுவார்ட்ஸ் வேதநாயகத்தைத் திருநெல்வேலியில் இருந்து தஞ்சைக்கு அழைத்து வந்து தம் மாணாக்கரில் ஒருவராக வைத்துப் பயிற்சி கொடுத்தார். வேதநாயகம் இறையியலோடு வானியல், ஊடலியல், சமூகவியல் முதலான பல்வேறு துறைகளிலும் தேர்ச்சி பெற்றார். தனது குரு வழங்கிய தாவீதின் சங்கீதங்கள் என்ற நூலைப் படித்ததாலேயே வேதநாயகம் படைப்பாக்கத் திறனைப் பெற்றார்.

“சாஸ்திரியாரும் சரபோசியும் சுவார்சையரின் அருமை மாணவர்களாகத் திகழ்ந்தவர்கள். எனவே நெருக்கமாகப் பழகியவர்கள். வேதநாயகம் சரபோசியைவிட மூன்று வயது மூத்தவர்.

ஆனால் சரபோசி மன்னர் மறைந்த பின்னரும் முப்பத்திரண்டு ஆண்டுகள் வேதநாயக சாஸ்திரியார் வாழ்ந்தார்."[4]

"கி.பி.1829 ஆம் ஆண்டில் சாஸ்திரியார் சரபோசி மன்னனை வாழ்த்திப் பாடியதால் அரசன் மகிழ்ச்சியடைந்த நிகழ்ச்சி ஒன்றும் கூறப்படுகிறது. இதனால் சாஸ்திரியாருக்கு மதிப்புள்ள இருக்கை அளித்துத் தமக்கு அண்மையில் வீற்றிருக்கச் செய்து சால்வை போர்த்தி, போலே ஐயர் கொடுத்த வண்ணம் வெள்ளை அங்கி தைத்துக் கொடுத்து மாதச் சம்பளமும் கொடுத்ததாக அறியலாம். அரசன் தன் அவைப் புலவராகச் சாஸ்திரியாரைப் பின்னர் நியமித்துக் கொண்டார்."[5]

ஜான் சாமுவேல் "வேதநாயக சாஸ்திரியார் இறைவனைப் பாடுவதே கவிதையின், கவிஞனின் குறிக்கோலாக இருக்க வேண்டும் என்ற கொள்கையினை உடையவர்"[6] என்கிறார்.

சாஸ்திரியாரின் படைப்புகள் பெரும்பான்மையும் கிறித்துவநெறிக் கோட்பாடுகளை மையமாகக் கொண்டிருப்பன.

தஞ்சையில் வேதநாயக சாஸ்திரியார் தலைமை ஆசிரியராக இருந்தபோது ஐந்து பாட நூல்களை எழுதியுள்ளார். அவை,

1. அகரவரிப் பொத்தகம்
2. ஆதியானந்தம், அறிவானந்தம்
3. அ) முன்னுரை
   ஆ) மெய்யறிவு
   இ) ஞானவழி
4. பராபரன் மாலை
5. நூறு சுலோகம் என்பன.

செய்யுளியற்றி உரை எழுதி இலக்கணம் வகுத்த இவர் "கணக்குப் பொஸ்தகம்" என்னும் நூலைப் படைத்தார். இறைவழிபாட்டுணர்வுகளை "ஜெபமாலை" என்னும் நூலின் மூலம் வெளிப்படுத்தினார்.

1. வேதநாயகன் சமர்த்துசுசு- சீட்டுக்கவி
2. பெத்லகேம் குறவஞ்சி
3. சென்னப்பட்டணப் பிரவேசம்
4. ஞானக்கும்மி
5. ஞான நொண்டி
6. தியானப்புலம்பல்
7. சாஸ்திரக்கும்மி
8. குருட்டு வழி
9. விதிவிலக்கு
10. பேரின்பக் காதல்

முதலானவை வேதநாயகம் படைத்த நூல்களுள் சில.

இவர் அண்ணாவியார், வேதசிரோமணி மகாஞானக் கவிச் சக்கரவர்த்தியார், சுவிசேடக் கவிராயர், ஞானதீபக் கவிராயர், வேதசாஸ்திரியார் என்னும் சிறப்புப் பெயர்களைப் பெற்றார்.

## பெத்லகேம் குறவஞ்சிச் சிறப்பு

வேதநாயக சாஸ்திரியார் பெத்லகேம் குறவஞ்சி என்னும் நூலை 1800 ஆம் ஆண்டில் எழுதினார். இந்நூல் குறவஞ்சி நூல்களுள் மிகப் பெரியது என்னும் சிறப்பைப் பெற்றது. "வேதநாயக சாத்திரியார் நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியிருப்பினும் பெத்லகேம் குறவஞ்சி நூலே வேதநாயக சாத்திரியாருக்குப் பெருமதிப்பையும் புகழையும் மேன்மையையும் தேழத்தந்தது."[7]

"கிறித்துவத் தமிழ் இலக்கியங்கள் பல இருப்பினும் இயேசுநாதரின் பெருமையைக் குறவஞ்சி வாயிலாக வெளிப்படுத்தும் தமிழ்நூல் இது ஒன்றே என்பர் ரா.பி. சேதுப்பிள்ளை.

"திருக்குற்றாலக் குறவஞ்சியின் கலை வளத்தையும் இலக்கிய நலத்தையும் அது மக்களால் நன்கு வரவேற்கப் பட்டதையும் கண்ட தஞ்சைச் சுவிசேடக் கவிராயர் வேதநாயகம் அக்கதையமைப்பு விவிலியச் செய்தியை விளம்புவதற்கும் ஏற்புடையதாக இருந்ததை உணர்ந்து கிறிஸ்துவையும் திருச்சபையையும் உள்ளிட்ட உருவகமாய்ப் "பெத்லகேம் குறவஞ்சி" என்ற குறவஞ்சி நாடகம் படைக்கலானார்."[8]

குறவஞ்சி நூல்கள் பலவற்றுள்ளும் பெத்லகேம் குறவஞ்சி மிகப்பல உறுப்புகளைப் பெற்று

சிலேடை, மடக்கு முதலிய அணி நலன்களையுடையதாய் விருத்தம், வெண்செந்துறை, தாழிசை மற்றும் இசைப்பாக்கள் பல விளங்கும் தரமுடையது. இது ஒரு முற்றுருவகநூல் என்னும் சிறப்புடையது.

குறத்தியின் பெயர் விசுவாசக் குறவஞ்சி. இவள் குறி சொல்லும் முறையில் பல்வேறு புதுமைகளைப் புகுத்தியுள்ளார் ஆசிரியர்.

பெத்லகேம் குறவஞ்சியின் முதற்பகுதியில் யோவான் அருளுரை, தேவமோகினி பந்தாட்டம் இரண்டாம் பகுதியில் விசுவாசக் குறவஞ்சி குறி சொல்லுதல் இறைவாக்குக் கூறல் மூன்றாம் பகுதியில் சிங்கன் சிங்கி உரையாடல் வழி இயேசுவின் பெருமை சுட்டப்படுதல் இடம்பெறுகின்றன.

இந்நூல் எழுபத்து இரண்டு தலைப்புகளில் அமைந்துள்ளது. முதல் தலைப்பு பாயிரம் இறுதித்தலைப்பு வாழ்த்து என்னும் நிலையில் அமைந்துள்ளது.

தலைவனாகிய ஏசுபிரான் உலா வருவது கண்ட தலைவி, தேவமோகினி தலைவன் மீது மையலுற்று வருந்துதல் விசுவாசக் குறவஞ்சி அவளுக்குக் குறி சொல்லி ஆறுதல் அளித்தல். குறச்சிங்கன் சிங்கியைத் தேடி வந்துச் சந்தித்து மகிழ்தல் முதலானவையே பெத்லகேம் குறவஞ்சியின் பாடுபொருளாக அமைகிறது.

"இந்நூல் திரிகூடராசப்பக் கவிராயரின் குற்றாலக் குறவஞ்சியை முன் மாதிரியாகக் கொண்டு அந்நூலுக்கு மறுப்பாகப் பாடப்பட்டது. இயேசு கிறிஸ்துவின் புகழ் பாடப்படினும் கிறிஸ்தவ மதத்தினைப் பரப்பும் நோக்கிலேயே இந்நூல் எழுதப்பட்டுள்து."[9]

"இந்நூல் முழுவதிலும் கிறிஸ்தவக் கருத்துக்கள் விரவிவரக் காணலாம். எனினும் பறவை மேயும் சிந்து, பறவை சாயும் சிந்து ஆகிய பகுதிகளில் அதிக அளவில் கிறிஸ்தவக் கருத்துக்கள் விளக்கப் படுகின்றன."[10]

குறக்குலத்தினர் மலைவாழ் மரபினர் குறவருக்கும் மலைக்கும் நெருங்கிய தொடர்புண்டு. இவர்கள் ஏசுவின் புகழ் பாடுதற்கு உரிமையுடையோர் என்பதைக் குறிக்கும் நிலையை,

**"ஒரு மலையில் மறுரூபம்**
**திரு மலையில் ஜெபரூபம்**
**அருள்மலையி லுயிரீயும் ஆண்டவனை**
**வாழ்த்துகிறேன்"**[11]

என்னும் வாழ்த்துப் பாடல் குறிப்பிடுகிறது.

"குற்றாலக் குறவஞ்சியில் மூன்று வகை வளங்களை விசுவாசக் குறவஞ்சி கூறுகின்றாள். அவை 1) கிறிஸ்தவரின் மகிமை 2) வாசல்வளம் 3) தேசவளம் எனப்படும்."[12]

## பெத்லகேம் குறவஞ்சியில் கிறிஸ்தவரின் மகிமை

உலக மீட்பராகக் கருதப்படும் கிறிஸ்துவை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபட்டு வருபவர்கள் கிறித்தவர்கள் ஆவர். பெத்லகேம் குறவஞ்சியில் கிறிஸ்தவரின் மகிமை பனிரெண்டு பாடல்களில் கூறப்பெற்றுள்ளது.

## பெருமைபெறும் சுவிசேடக் கிறிஸ்தவர்கள்

விசுவாசக் குறவஞ்சி கண்ணியம் மிகுந்த பெத்லகேம் மன்னனுடைய இனத்தின் மாட்சிமையைக் கூறியது போல கிறிஸ்தவர்களின் பெருமையைக் கூறினாள்.

கிறிஸ்தவர்களைச் சிறந்த மும்முடிவான சமயக் கிறிஸ்தவர்கள் மூவொரு கடவுளின் கிறிஸ்தவர்கள் நேர்மை மிகு பத்துக் கட்டளைகளையுடையவர்கள் நிலையான நீதிச்சட்டமும் வளமையில் வளரும் தன்மையுடையவர்கள் இயேசுவுக்கு விருப்பமானவர்கள் திருமறைக் கிறிஸ்தவர்கள் மேன்மை பெற்ற நற்செய்திக் கிறிஸ்தவர்கள் என்பதனை,

**"ஏர்மிகுத்த வளம்பெருகுங் கிறிஸ்தவர்ளம்மே**
**யேசுநாத ருக்குகந்த கிறிஸ்தவர்களம்மே**
**பேர்மிகுத்த சத்தியமறைக் கிறிஸ்தவர்களம்மே**
**பெருமைபெறுஞ் சுவிசேடக் கிறிஸ்தவர்களம்மே"**
***(பெத்.குற.கிறிஸ்தவரின் மகிமை, பா.1:5-8)***

என்னும் அடிகள் சிறப்பிக்கின்றன.

**வேதமெலாம் உணர்ந்த கிறிஸ்தவர்கள்**

திருமறை முழுவதனையும் நன்கு அறிந்தவர்கள் உயர் வழி கண்டவர்கள் நீதிநெறியுடன் வாழ்ந்து வருபவர்கள் நிலையான வாழ்வுக்குச் செல்பவர்கள் அறிவு மிகுந்த கன்னியர் வேறு பாடற்ற நட்புடைமை உயடைவர்கள் போதனைகளை நினைவு கூரும் நன்மை மிகுந்தவர்கள் என்று கிறிஸ்தவர்களைக் குறவஞ்சி குறிப்பிடுவதனை (பெத்லகேம்குறவஞ்சி, கிறிஸ்தவரின் மகிமை, பா.2) அறியமுடிகிறது.

**மூவாசை கடந்த கிறிஸ்தவர்கள்**

உண்மையான திருமறையில் சிறந்தவர் நன்னெறியில் விளக்கமடைந்தவர் இறையன்பு மிகுந்த தூய்மையுடையவர் இறைவனின் பிள்ளைகள் விண்ணுலகம் தரும் வழியை அடைந்தவர்கள் மண், பெண், பொன் ஆகிய மூவாசைகளைக் கடந்தவர் செருக்குடன் பேசாத இயல்பினர் பெத்லகேம் கிறிஸ்தவர்கள் என்பதனை,

**"மூன்றாசை தனைக்கடந்த கிறிஸ்தவர்களம்மே"**
***(பெத்லகேம் குறவஞ்சி,***
***கிறிஸ்தவரின் மகிமை, பா.4:6)***

என்னும் அடி சுட்டுகிறது.

**வாக்குத் திறனுடைக் கிறிஸ்தவர்கள்**

பெத்லகேம் கிறிஸ்தவர்கள் பிறந்த எட்டாம் நாளில் ஆலயத்தில் இறையருள் பெற்றவர் துன்பத்திலும் கலங்காதவர்கள் குழப்பம் இல்லாத தெளிவானவர்கள் ஈறைவனுடைய உறுதிமொழியைப் பெற்றவர்கள் பின்பிருந்து புறங்கூறாதவர்கள் என்று பெத்லகேம் கிறிஸ்தவர்கள் புகழப்படுவதனை (கிறிஸ்தவர்களின் மகிமை - 6) அறியமுடிகிறது.

**அக்கியானச் சடங்கறுத்த கிறிஸ்தவர்கள்**

பெத்லகேம் கிறிஸ்தவர்கள் அறியாமைச் சடங்குகளை முற்றிலும் அகற்றியவர்கள் ஆசையை விட்டொழித்தவர்கள் மிகுதியான இறையருள் வரங்களைப் பெற்றவர்கள் மிகுந்த பொறுமையும் மனத்தாழ்மையும் உடையவர்கள் என்பதனை,

**"அக்கியானச் சடங்கறுத்த கிறிஸ்தவர்களம்மே**
**ஆசையெல்லாம் விட்டொழிந்த கிறிஸ்தவர்களம்மே**
**மிக்கானவரமுடையகிறிஸ்தவர்களம்மே**
**வெகுவான பாஷைகற்ற கிறிஸ்தவர்களம்மே"**
***(பெத்லகேம் குறவஞ்சி,***
***கிறிஸ்தவரின் மகிமை, பா.1:4)***

என்னும் அடிகள் குறிப்பிடுகின்றன.

**விண்ணுலகின் விருதுடைக் கிறிஸ்தவர்கள்**

பெத்லகேம் நகரத்துக் கிறிஸ்தவர்கள் வெண்ணிறமான மெல்லிய ஆடையை அணிந்தவர்கள் விண்ணுலகின் வெற்றிச் சின்னத்தை உடையவர்கள் கைமாறாத செல்வத்தையுடையவர்கள் பேசுதற்கு அருமையான திருமறைகளை உடையவர்கள் பிள்ளைகளுக்கு அறிவுரை கூறும் இயல்பினர் என்பதனைப் பெத்லகேம் குறவஞ்சியின் கிறிஸ்தவர்களின் மகிமை (8) விளக்குகிறது.

**வாய்ப்புட்டுக் கிறிஸ்தவர்கள்**

கிறிஸ்தவர்கள் விரிவாகப் பேசாது வாய்களுக்குப் புட்டுப் போட்டவர் வலிமையுடைய இறைவனின் உதவி பெற்றவர் இனிமையாகவும் அழகாகவும் பேசுபவர் தீமைகளைக் கண்டுபயப்படாதவர் அழிந்து போகின்றவரை அழிவினின்று காப்பவர் பேய்களை அழித்தவராகிய இறைவனுடையவர் மேன்மையுடைய நற்செய்தியுடையவர்கள் என்பதனை,

**"வாய்களுக்குப் புட்டு வைத்த கிறிஸ்தவர்களம்மே**
**வலியோனின் சலுகைகொண்ட கிறிஸ்தவர்களம்மே"**
***(பெத்லகேம் குறவஞ்சி,***
***கிறிஸ்தவரின் மகிமை, பா.12:1-2)***

என்னும் அடிகள் விளக்கி நிற்கின்றன.

கிறிஸ்தவர்களின் மகிமை என்னும் பகுதியில்உள்ளபனிரெண்டுபாடல்களிலும் கடைசி அடி "பெருமைபெறும் சுவிசேடக் கிறிஸ்தவர்களம்மே" என்று முடியும் சிறப்புக் கொண்டது.

## தொகுப்புரை

வேதநாயகம் சாஸ்திரியார் திருநெல்வேலியில் தேவசகாயம் ஞானப்பு தம்பதியர்க்கு 1774இல் மகனாகப் பிறந்தார். சுவார்ட்ஸ் ஐயர் நெல்லையிலிருந்து தஞ்சைக்கு வேதநாயகத்தை அழைத்துச் சென்று இறையியல் கற்பித்தார். இறையியல், உடலியல், சமூகவியல் துறைகளில் கற்றுத் தேர்ந்த இவரது வகுப்புத் தோழர் சரபோசி மன்னராவர். சரபோசி மன்னர் அவையில் அவைக்களப் புலவராகும் சிறப்புப் பெற்றவர். நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களைப் படைத்த வேதநாயகம் அண்ணாவியார் ஞானதீபக் கவிராயர் முதலான பட்டங்களைப் பெற்றார். கிறிஸ்தவக் கருத்துகளை மிகுதியாகத் தமது படைப்புகளில் படைத்துக் கிறிஸ்தவத்தைத் தமிழகத்து நிலை நிறுத்தியவர். "வேதநாயக சாஸ்திரியாரின் பெத்லகேம் குறவஞ்சிச் சிறப்பும் கிறிஸ்தவர்களின் மகிமையும்" என்னும் ஆய்வுக் கட்டுரையின் வழி,

- பெத்லகேம் குறவஞ்சி 1800 இல் இயற்றப்பட்டது. திரிகூடராசப்பக் கவிராயரின் குற்றாலக் குறவஞ்சியை முன்மாதிரியாகக் கொண்டு அதற்கு மறுப்பாக எழுதப்பட்டது. இதில் எழுபத்திரண்டு பகுதிகள் உள்ளன. சாஸ்திரியார் படைத்த நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களுள் பெத்லகேம் குறவஞ்சிஅவருக்குப்பெருமதிப்பையும் புகழையும் மேன்மையையும் பெற்றுத்தந்தது.
- பெத்லகேம் குறவஞ்சி மூன்று பகுதிகளை உடையது. முதற்பகுதியில் யோவான் அருளுரை தேவமோகினி பந்தாட்டம் இரண்டாம் பகுதியில் விசுவாசக் குறவஞ்சி குறி சொல்லுதல், இறைவாக்குக் கூறல் மூன்றாம் பகுதியில் சிங்கன் சிங்கி உரையாடல் வழி இயேசுவின் பெருமை கூறப்படுதல் இடம்பெற்றுள்ளன.
- பறவை மேயும் சிந்து, பறவை பாயும் சிந்து ஆகிய பகுதிகளில் கிறிஸ்தவக் கருத்துகள் சுட்டப்படுகின்றன.
- மலைவாழ் குறமக்கள் இயேசுவைப் புகழ்ந்து பாடுவது விளக்கப்படுகிறது.
- பெத்லகேம் குறவஞ்சியில் குற்றாலக் குறவஞ்சியில் இல்லாத கிறிஸ்தவர்களின் மகிமை, வாசல்வளம், தேசவளம் முதலானவை கூறப்பட்டிருப்பது சிறப்புடையது.
- உலகமீட்பராகிய இயேசுவை வழிப்படும் கிறிஸ்தவர்களின் மகிமை பனிரெண்டு பாடல்களிலும் ஒவ்வொரு பா டலின் இறுதியிலும் "பெருமைபெறுஞ் சுவிசே டக் கிறிஸ்தவர்களம்மே" என்னும் அடி இடம்பெற்றுள்ளது.
- கிறிஸ்தவர்கள் பத்துக் கட்டளைகளையும் வளமைகளையும் நிலையான நீதிகளையும் உடையவர்கள்.
- திருமறை முழுவதையும் அறிந்தவர்கள் மண், பெண், பொன் என்னும் மூவாசை கடந்தவர்கள், செருக்குடன் பேசாதவர்கள், இறையருள் பெற்றவர்கள்.
- துன்பத்தில் கலங்காதவர்கள் புறங்கூறாதவர்கள் அறியாமைச் சடங்கு அறுப்பவர்கள் பொறுமையும் தாழ்மையும் உடையவர்கள் ஆசையை விட்டொழித்த சிறப்புடையவர்கள்.
- விண்ணுலகின் விருது பெற்றவர்கள் வெண்ணிற மெல்லிய ஆடை அணிந்தவர்கள் பிள்ளைகளுக்கு அறிவுரை கூறும் தன்மையர்.
- விரிவாகப் பேசாது வாய்களுக்குப் பூட்டுப் போட்டவர் இறைவளமை பெற்றவர் அழகாகப் பேசுபவர் தீமைகளைக் கண்டு பயப்படுபவர் அழிந்து போகின்றவரை அழிவினின்றும் காப்பவர்
- முதலானவை பெறப்படுகின்றன. கிறிஸ்தவக் கருத்துகள் மட்டுமின்றி பெத்லகேம் குறவஞ்சி கருத்து வளத்தாலும் அணி நலத்தாலும் பாடல் வன்மையாலும் தனிச்சிறப்புப் பெறும் தகைமையுடையதாய்த் திகழ்கிறது.

### சான்றெண் விளக்கம்

1. நோவா ஞானாதிக்கம் சாஸ்திரியார், வேதநாயக சாஸ்திரியார் சரித்திரம், ப.6
2. மேலது, ப.14
3. மயிலை சீனி வேங்கடசாமி, கிறித்தவமும் தமிழும், ப.123
4. டாக்டர் சி.மணிவளன், வேதநாயக சாஸ்திரியாரின் இலக்கியத் திறன், ப.26
5. மேலது, ப.26
6. ஜான் சாமுவேல், இலக்கியக் கொள்கை - 2, ப.399
7. சே.சுந்தரராசன் (உரை.), பெத்லகேம் குறவஞ்சி, முன்னுரை.
8. டாக்டர் சி.மணிவளன், வேதநாயக சாஸ்திரியாரின் இலக்கியத் திறன், பக்.101-102
9. பெ.கொவிந்தசாமி, கிறிஸ்தவத் தமிழ் நாடகங்கள், ப.47
10. மேலது, ப.49
11. சே.சுந்தரராசன் (உரை.), பெத்லகேம் குறவஞ்சி, வாழ்த்து, 8
12. டாக்டர் சி.மணிவளன், வேதநாயக சாஸ்திரியாரின் இலக்கியத் திறன், ப.108

### துணைநின்ற நூல்கள்

1. பெ.கோவிந்தசாமி, கிறிஸ்தவத் தமிழ் நாடகங்கள், கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், சென்னை, முதற்பதிப்பு - 1992.
2. சே.சுந்தரராசன் (உரை), பெத்லகேம் குறவஞ்சி, முல்லை நிலையம், 9, பாரதிநகர் முதல் தெரு, தி.நகர், சென்னை, முதற்பதிப்பு - 2009.
3. சீனி வேங்கடசாமி, மயிலை கிறித்துவமும் தமிழும், தி.தெ.சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை, ஆறாம் பதிப்பு - 1971.
4. நோவா ஞானாதிக்கம் வேதநாயகம் சாஸ்திரியார் சரித்திரம், சாஸ்திரியார் வேதநாயகம் சாஸ்திரியார் (வெளியீடு), தஞ்சாவூர், 1987.
5. மணிவளன் சி. வேதநாயகம் சாஸ்திரியாரின், டாக்டர் அருள்தந்தை இலக்கியத்திறன், தென்பொதிகைத் தமிழ்ச் சங்கம், 86, மேலரத வீதி, எட்டையபுரம், தூத்துக்குடி, 2002.